## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை?

இந்த மருந்தை எடுப்பதற்கு முன்னால்,

- எந்த மருந்தாவது உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படுத்துமா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் வேறு மருந்துகள் எடுத்து வருகிறீர்களா என்பதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள். ஊட்டச்சத்து உணவுகளையும் வைட்டமின்களையும் இதில் சேர்த்துக் கொள்ளவும்.
- உங்களுக்கு மருத்துவப் பிரச்னைகள் ஏதாவது உள்ளதா என்பதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- நீங்கள் கர்ப்பமாக இருந்தால், கர்ப்பம் தரிக்க திட்டமிட்டால், அல்லது தாய்ப்பால் கொடுத்து வந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.
- இந்த மருந்து எடுக்கும்போது மது அருந்தாதீர்கள்.
- இந்த மருந்து சிலருக்கு அதிக துக்கத்தையும் மந்த நிலையையும் உண்டாக்கும். உங்களுக்கு எப்படி என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். விழிப்பு நிலையில் இல்லாதபோது வாகனம் ஓட்டுதல், இயந்திரம் இயக்குதல் போன்ற வேலைகளைச் செய்வது ஆபத்தில் முடியலாம்.

## மருந்தை நான் எப்படி **வைத்திருக்க** வேண்டும்?

மருந்தை காற்று புகாத டப்பாவில் வைத்திருங்கள். அதன்மீது வெப்பமோ சூரிய ஒளியோ படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Ministry of Health

National Healthcare Group

SingHealth



# நோயாளி தகவல் கையேடு



# 'ஈர' இருமல் சிகிச்சைக்கான மருந்துகள்

குவை.:.பெனிஸின் • டை.:.பென்ஹைட்ரமைன்

## Medicine To Treat 'Wet' Coughs

Guaiphenesin • Diphenhydramine

T65R0

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

குவை∴பெனிஸின் (Guaiphenesin) என்னும் இந்த மருந்து, காற்று வழிகளை அடைத்திருக்கும் சளியை இளக்கி விடுவதால், அந்த சளியை இருமி வெளியேற்றுவது சுலபமாக இருக்கும். சளி வெளியேறுவதால் காற்றுவழிகள் சுத்தமாகிவிடும். எனவே சுவாசிப்பதும் எளிதாக இருக்கும். இந்த மருந்தைக் கொண்டிருக்கும் தயாரிப்புகளில், ரோபிட்டுஸின் (Robitussin) மற்றும் ஆக்டி∴பெட் எக்ஸ்பெக்டொரண்ட் (Actifed Expectorant) என்பவை அடங்கும்.

டை∴பென்ஹைட்ரமைன் (Diphenhydramine) என்பது ஹஸ்டமின்-எதிர்ப்பு மருந்தாகும். இது சளியின் ஈரத்தை வற்றச் செய்கிறது, சளியின் உற்பத்தியைக் குறைக்கிறது மற்றும் சுவாச காற்றுவழிகள் விரிவடையச் செய்கிறது.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும்?

மருத்துவர் கூறியபடியே உட்கொள்ள வேண்டும். மருந்தை சரியாக எடுக்கத் தெரியவில்லை என்றால், உங்கள் மருந்தாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

மருத்துவர் தண்ணீரைக் குறைக்கச் சொன்னாலன்றி, இந்த மருந்து எடுக்கும்போது தண்ணீர் அதிகமாக அருந்துங்கள்.

மருந்து எடுத்த 7 நாட்களுக்குள் இருமல் குறையவில்லை என்றால், அல்லது கடுங் காய்ச்சல், தோல் தடிப்புகள், அல்லது நீங்காத தலைவலி இருந்தால், மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.



நோயாளி தகவல் கையேடு । 'ஈர' இருமல் சிகிச்சைக்கான மருந்துகள்

## மருந்து உட்கொள்ள நான் மறந்துவிட்டால் என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளையிலிருந்து வழக்கம்போல் தொடருங்கள். முதல் வேளையில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு உட்கொள்ளாதீர்கள்.

## இம்மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை?

பக்க-விளைவுகள் பொதுவாக இருக்காது என்றாலும், அவை ஏற்படக்கூடிய சாத்தியமும் உள்ளது. கீழ்க்காணும் பக்க-விளைவுகள் மோசமானாலோ அல்லது நீடித்தாலோ, மருத்துவரைப் பாருங்கள்.

| மருந்து | பக்க-விளைவுகள் |
|---|---|
| குவை∴பெனிஸின் (Guaiphenesin) | தலைவலி<br>வயிற்றுக் கோளாறு<br>குமட்டல் அல்லது வாந்தி<br>வயிற்றுப்போக்கு |
| டை∴பென்ஹைட்ரமைன் (Diphenhydramine) | வாய், மூக்கு, தொண்டை உலர்தல்<br>மந்தம்<br>வயிற்றுக் கோளாறு<br>தலைவலி<br>பார்வை மங்குதல் |